


**21. 12. 2025**

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் வளர்ச்சியில் அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. போலி உரம் மற்றும் பூச்சிக்கொல்லி விற்பனைக்கு எதிராக அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

3. நாட்டில் மேம்பட்ட ரயில் சேவை உறுதி செய்யப்படுவதாக ரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது.

4. நெல்லை முக்கூடல் காங்கேயன் கால்வாய் சீரமைக்கப்படும் உள்ளிட்ட 3 அறிவிப்புகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று வெளியிட்டுள்ளார்.

5. 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஆடவர் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் இந்தியாவிற்கு எதிராக பாகிஸ்தான் சற்றுமுன் 7 விக்கெட் இழப்பிற்கு 319 ரன் எடுத்திருந்தது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நாட்டின் வளர்ச்சியில் அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களின் பங்களிப்பு அதிகரித்து வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அசாம் மாநிலம் நாம்ரூப்பில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் தற்போது உரையாற்றும் அவர், பொதுமக்கள், விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரின் நலனுக்கான திட்டங்கள் முனைப்புடன் செயல்படுத்தப் படுவதாக கூறினார்.

12 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான அமோனியா, யூரியா உர தொழிற்சாலைக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டதன் மூலம் விவசாயிகளின் வருமானம் அதிகரிப்பதுடன் புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார்

மாநிலத்தின் வளர்ச்சியில் அரசு உறுதி பூண்டுள்ளதாக கூறிய பிரதமர், உயர் தரத்திலான உள்கட்டமைப்பு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டத்தை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக பிரம்மபுத்திரா நதிக்கரையில் தேர்வு குறித்த மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியின் ஒருபகுதியாக 25 பள்ளி மாணாக்கருடன் கலந்துரையாடினார்.

❖❖❖❖❖❖❖

ஷிவ்ராஜ் சிங்

போலி உரம் மற்றும் பூச்சிக்கொல்லி விற்பனைக்கு எதிரான மசோதா வரும் நாடாளுமன்ற கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், இத்தகைய சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு ஒருங்கிணைந்த வலுவான நடவடிக்கைகளை எடுத்து வருவதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான G – RAM மசோதார ஊரக பகுதி மக்களுக்கான 100 நாள் வேலை திட்டத்தை 125 நாட்களாக அதிகரிக்கும் என்றார்.

❖❖❖❖❖❖❖

மன்சுக் மாண்டவியா

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, ஃபிட் இந்தியா இயக்கத்தின் ஒருபகுதியாக புதுச்சேரியில் இன்று நடைபெற்ற ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

ஆரோக்கிய இந்தியாவிற்கான மிதிவண்டி இயக்கத்தின் ஓராண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் புதுச்சேரி முதலமைச்சர் திரு.எல்.ரெங்கசாமி, ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், மாணாக்கர், பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மக்கள் இயக்கமாக மாறியுள்ள சைக்கிள் ஓட்டுவதை முறையான பழக்கமாக மாற்றுவது மற்றும் அதன் நன்மைகள் குறித்தும் இதில் எடுத்துரைக்கப் பட்டது.

❖❖❖❖❖❖❖

ஜெய்சங்கர்

இந்தியாவின் வெளியுறவு கொள்கைகள் மேலை நாடுகளின் கொள்கைகளுக்கு மேம்பட்டு விளங்குவதன்

அவசியத்தை மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

புனேயில் நடைபெறும் சர்வதேச புத்தகத் திருவிழாவில் உரையாற்றிய அவர், நமது ராமாயணமும், மகாபாரதமும் வெறும் ஆன்மீக புத்தகங்களாக மட்டுமல்லாமல் உலகளாவிய அரசியல் சிக்கல்களுக்கு மிகச்சிறந்த தீர்வாக அமைவதாக பெருமிதம் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

சர்வதேச தியான தினம்

இரண்டாவது சர்வதேச தியான தினம் இன்று கடைப்பிடிக்கப் படுகிறது.

உலகளாவிய அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கு தியானம் என்ற கருப்பொருளுடன் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

இந்நாளையொட்டி ஹைதராபாத் கன்ஹா சாந்தி வனத்தில் நடைபெறும் தியான நிகழ்ச்சியில் குடியரசு துணைத்தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் இன்று பங்கேற்கிறார்.

திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி மலையில் அமைந்துள்ள உலக சமாதான அறக்கட்டளை நிறுவனத்தின் சார்பில் இரண்டாவது தியான தினம் மற்றும் 36-வது பிரபஞ்ச நல மகா தவ வேள்வி இன்று கடைபிடிக்கப்பட்டது.

தனி மனித அமைதியின் முக்கியத்துவம் இதில் வலியுறுத்தப்பட்டது.

இந்நாளையொட்டி விழுப்புரம் ராமகிருஷ்ண மடத்தில் பள்ளி மாணாக்கர் மற்றும் பொதுமக்கள் தியான பயிற்சியில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 129-வது முறையாக பிரதமர் வரும் 28-ம் தேதி உரையாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் இடம்பெற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை வரும் 26-ம் தேதிவரை நமோ செயலி, mygov இணையதளம், 18 00 11 78 00 என்ற இலவச தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖

ரயில் கட்டணம் உயர்வு

நாடுமுழுவதும் 215 கிலோ மீட்டர் தொலைவிற்கு அதிகமான ரயில் பயண கட்டணங்கள் மாற்றியமைக்கப் பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி சாதாரண வகுப்பு ரயில் கட்டணம் கிலோ மீட்டருக்கு ஒருபைசாவும்

குளிர்சாதன வகுப்பிற்கான கட்டணம் கிலோ மீட்டருக்கு 2 பைசாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட இந்த கட்டண உயர்வு வரும் 26-ம் தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

இதன்மூலம் 600 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்படும் என கூறியுள்ள ரயில்வே அமைச்சகம் அதிகரித்துவரும் மனித ஆற்றில் தேவைகளை ஈடுசெய்ய இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

நாட்டில் மேம்பட்ட ரயில் சேவை மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய மனித ஆற்றல் அதிகரிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ரயில்வே அமைச்சகம் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாட்டின் முன்னணி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

நெல்லை அரசு மருத்துவ கல்லூரியில் இன்று நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் 538 அரை கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை தொடங்கி வைத்து பேசிய அவர்,

நெல்லை ராணி அண்ணா கல்லூரியில் 11 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கும் விடுதி அமைக்கப்படும்,

முக்கூடல் காங்கேயன் கால்வாய் சீரமைக்கப்படும்,

வள்ளியூரான் கால்வாய் தூர்வாரப்படும் ஆகிய 3 அறிவிப்புகளை வெளியிட்டார்.

.. வாய்ஸ் ..

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோவில் வெள்ளித்தேரோட்டம் வரும் ஜனவரி முதல்வாரத்தில் நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளதாக கூறிய அவர், தமிழகத்தின் பழம்பெரும் வரலாற்று சிறப்புகளை எடுத்துரைக்கும் பொருநை அருங்காட்சியகத்தை அனைவரும் பார்வையிட வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் 44 ஆயிரத்து 924 பயனாளிகளுக்கு 101 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்கினார்.

முன்னதாக 50 அரசு பேருந்து சேவைகளை தொடங்கி வைத்த முதலமைச்சர், காயிதே மில்லத் நினைவு நூலகத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

❖❖❖❖❖❖❖

வாக்காளர் பட்டியல்

தமிழகத்தின் அனைத்து வாக்குச்சாவடிகளிலும், வாக்காளர் சிறப்புமுகாம் 2-வது நாளாக இன்றும் நடைபெறுகிறது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்குப்பின் வெளியிடப்பட்டுள்ள வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட தகுதியுடைய வாக்காளர்கள் விண்ணப்பிக்க ஏதுவாக அடுத்தமாதம் 18-ம் தேதிவரை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் இம்முகாம்கள் நடைபெறுகின்றன.

❖❖❖❖❖❖❖

S.I. Exam

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் சார்பில் காவல் உதவிஆய்வாளர் பணியிடங்களுக்கான எழுத்துதேர்வு மாநிலம் முழுவதும் 46 மைங்களில் இன்று நடைபெறுகிறது.

தமிழக காவல்துறையில் சட்டம் ஒழுங்கு ஆயுதப்படை பிரிவுகளில் காலியாகவுள்ள ஆயிரத்து 299 உதவி ஆய்வாளர் பணியிடங்களுக்கு நடைபெறும் தேர்வில் ஒன்றரை லட்சத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖❖

இருவரி

நாட்டின் பல்வேறு மாநிலங்களில் கடும் பனிப்பொழிவு தொடரும் நிலையில் விமானப் பயணிகள் தங்களது பயணத்திற்கு முன்கூட்டியே தயாராகுமாறு அரசு அறிவுறுத்தியுள்ளது.

வாகனப் போக்குவரத்து தாமதங்களை தவிர்க்க இந்நடவடிக்கை.

இதனிடையே நீலகிரி மாவட்டம் தலைகுந்தா, ஃபைன் ஃபாரஸ்ட் உள்ளிட்ட பகுதிகளில் உறைபனியின் தாக்கம் அதிகரித்து காணப்படுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் நீர் நிலைகளில் வாழும் பறவைகள் கணக்கெடுப்பு பணிகள் வரும் 27, 28 தேதிகளில் நடைபெறவுள்ளது.

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் பராமரிப்பு பணிகள் காரணமாக நாளை

ஒருநாள் ரோப்கார் சேவை இருக்காது என கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

ரயில்

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு தெலங்கானா மாநிலம் செகந்திராபாத்திலிருந்து வேளாங்கன்னிக்கு கூடுதல் சிறப்பு ரயில் இயக்கப்பட உள்ளதாக ரயில்வே அறிவித்துள்ளது.

செகந்திராபாத்தில் நாளைமறுநாள் இரவு 7.35 மணிக்கு புறப்படும் இந்த ரயில், சென்னை எழும்பூர் வழியாக புதன்கிழமை மாலை 5.30 மணிக்கு வேளாங்கன்னி வந்தடையும்

மறுமார்க்கத்தில் வேளாங்கன்னியிலிருந்து டிசம்பர் 25-ம் தேதி காலை 8 மணிக்கு புறப்படும் இந்த ரயில் அடுத்தநாள் காலை 6.20க்கு செகந்திராபாத் சென்றடையும்.

❖❖❖❖❖❖❖

உதகை

உதகையில் 42 லட்ச ரூபாய் மதிப்பில் நாய்களுக்கான பிரத்யேக பூங்கா தொடங்கப் பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

துபாயில் இந்தியாவிற்கு எதிரான 19 வயதிற்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஆடவர் ஒருநாள்

சர்வதேச கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் பாகிஸ்தான் சற்றுமுன் 7 விக்கெட் இழப்பிற்கு 319 ரன் எடுத்திருந்தது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.